# COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, KANNIYAKUMARI AT NAGERCOIL.

11.07.2025

C.O.S. No. 3/2024

P.W.2 திரு. சதீஷ்குமார்

சாட்சி மீண்டும் இன்று அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை (1 மற்றும் 3 ஆம் பிரதிவாதிகள் தரப்பில்) -**

M.Sand, B.Sand மற்றும் ஜல்லி ஆகியவை விற்பதற்கு எனக்கு உரிமம் கிடையாது என்றால் சரியல்ல, உள்ளது. எந்த முகவரியில் கடை உள்ளது, எந்த முகவரிக்கு உரிமம் உள்ளது என்றால் கடை எதுவும் கிடையாது. தேவைப்படுபவர்களுக்காக கிரஷரிலிருந்து எடுத்துக் கொடுப்பேன். தற்போது சாட்சி உரிமம் எதுவும் இல்லை என்று கூறுகிறார். ஜல்லி, மணல் ஆகியவற்றை வாகனத்தில் ஏற்றி எடுத்து செல்ல வேண்டும் என்றால் அரசிடமிருந்து உரிய அனுமதி பெற வேண்டும் என்றால் சரிதான். ஒவ்வொரு லோடுக்கும் அனுமதி வேண்டும் என்றால் சரிதான். எவ்வளவு லோடு இறக்குகிறோமா அதற்கான கணக்குகளை சரியாக பராமரிக்க வேண்டும் என்றால் சரிதான். என்னுடைய பணி லோடை இறக்கி கொடுப்பது மட்டும்தான் என்றால் சரிதான். எவ்வளவு ரூபாய்க்கு லோடு இறக்கப்பட்டது என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தொியாது என்றாலும் கணக்கு பார்த்தால் தான் தொியும் என்றாலும் சரிதான். கணக்கு வழக்கு ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். எனது ஞாபகத்திலிருந்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரிதான். வாதி சுரேஷ்குமார் எனது நண்பரா என்றால் இல்லை. நான் TN 75 S 1768 வாகனத்தின் டிரைவரா ஓனரா என்றால் டிரைவர். அந்த வாகனத்தின் ஓனர் யார் என்றால் மைக்கேல் என்பவர். மைக்கேல் சொல்லக்கூடிய வேலைகளை நான் செய்வேனா என்றால் ஆமாம். எந்தவித கட்டுமான பொருட்களும் நான் இறக்கியது இல்லை என்றாலும் சரியல்ல. TN 75 S 1768 வாகனத்திற்கும், எனக்கும் எந்த தொடர்பும்இல்லை என்றால் சரியல்ல. வாதி எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் இந்த வழக்கில் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல. இந்த வாகனத்திற்கும், எனக்கம் எந்த தொடர்பும் இல்லாததால்தான் இந்த வழக்கில் நான் கணக்கு வழக்குகளோ, வேறு எந்த ஆவணங்களோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2, 4 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரில்லை. குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.